# யா / நாவற்குழி மகா வித்தியாலயம்



## பரிசில் நாள் - 2015

### அதிபர் அறிக்கை

### 14.10.2016

# யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்
## பரிசில் நாள் - 2015

காலம் : 14.10.2016 வெள்ளிக்கிழமை
நேரம் : பி.ப. 2.00 மணி
இடம் : வித்தியாலய அரங்கு

**தலைமை**

திரு.சி.பவளகுமாரன் அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

**முதன்மைவிருந்தினர்**

திருமதி.விஜயலட்சுமி கேதீஸ்வரன்
(கௌரவ முதலமைச்சரின் செயலாளர், வடமாகாணம்)

**சிறப்பு விருந்தினர்**

உயர் திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார்
(வலயக்கல்விப்பணிப்பாளர்,தென்மராட்சி)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு.சி.குகன்
(யாழ் மாவட்ட திட்ட இணைப்பாளர், வேல்ட் விஷன்

திரு.கி.றொசைறோ
(முகாமையாளர் பிரதேச அபிவிருத்தி திட்டம்
தென்மராட்சி வேல்ட் விஷன்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பாடசாலைச்சமூகத்தினர்-

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- கொடியேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- ஆசியுரைகள்
- வரவேற்பு நடனம்
- வேல்ட் விஷன் கட்டடங்களின் திறப்பு
- வரவேற்புரை
- அதிபர் அறிக்கை
- பரிசில் வழங்கல்
- விருந்தினர்கள் உரை
- கலை நிகழ்வுகள்
- நன்றியுரை

# அதிபர் அறிக்கை

*இனிய வணக்கம்*

எமது அழைப்பை ஏற்று இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகைதந்திருக்கும் கௌரவ முதலமைச்சரின் செயலாளர் திருவாட்டி விஜயலட்சுமி கேதீஸ்வரன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகைதந்திருக்கும் தென்மராட்சி வலயக் கல்விப்பணிமனையின் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் அவர்களே, கௌரவ விருந்தினர் களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வேல்ட் விஷன் நிறுவன யாழ் மாவட்ட திட்ட இணைப்பாளர் திரு.சி.குகன் அவர்களே மற்றும் வேல்ட் விஷன் பிரதேச அபிவிருத்தி திட்ட முகாமையாளர் திரு.கி.றொசைரோ அவர்களே, பிரதிக் கல்விப்பணிப்பாளர்களே, உதவிக் கல்விப்பணிப்பாளர்களே கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்களே, முதன்மையாசிரியர் களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியப் பெருந்தகைகளே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, மாணவச் செல்வங்களே அனைவரையும் வருக வருக என மகிழ்ந்து வரவேற்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண் டிருக்கும் வடமாகாண முதலமைச்சரின் செயலாளரர் திருவாட்டி விஜயலட்சுமி கேதீஸ்வரன் அவர்களே, தாங்கள் கடந்த மூன்று தசாப்த தமிழர் வரலாற்றில் வடமாகாண முதலமைச்சின் முதற்செயலாளராக பொறுப்பினையேற்று செவ்வனே செயலாற்றி பிரதேச அபிவிருத்திக்கு அரும்பாடுபட்டு வருவதனை வரலாறு ஒருபோதும் மறந்து விடாது.

"திறமையால் இங்கு மேனிலை சேர்ப்போம் தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்...." எனும் பாரதியின் புதுமைப்பெண் இலக்கணமாய் திகழ்ந்து தற்துணிவுடன் செயற்படும் தங்கள் முகாமைத்தவ ஆற்றல் காரணமாக வடமாகாணம் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

தாங்கள் எமது பிரதேசத்தைச் சேர்ந்தவராக காணப்படு வதுடன் இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்று யாழ் பல்கலைக்கழகம் சென்று 1984ல் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவாகி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ,வவுனியா, கொழும்பு என பல்வேறு இடங்களிலும் பணியாற்றி தற்பொழுது மீண்டும் யாழ் மீண்டு வடமாகாணத்திற்கென உருவாக்கப்பட்ட முதல் முதல மைச்சின் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டு செயற்பட்டு வருவது கண்டு இறுமாப்படைகின்றோம்.

தாங்கள் தங்களது பணியை வடக்குத் தெற்குப் பாதைகள் மூடப்பட்ட காலத்தில் இணைப்பாளராக வழங்கியமையும், போராட்ட இறுதிக் காலத்தில் இடம் பெயர்ந்த மக்களின் புனர் வாழ்வுக் கருத்திட்ட இணைப்பாளராக செயற்பட்ட செய்தியையும் அறியக்கிடைத்த போது "உற்ற நேரத்தில் உதவி செய்யும்" நிர்வாகத்திறன் கொண்ட ஒருவரை எம்பள்ளி பெற்றிருக்கின்றது எனப்பெருமையடைகின்றோம். தங்கள் வரவு எம்பள்ளிச்சிறார் களுக்கு ஒரு முன்னோடிப் பதிவாக அமையும் என நம்புகின்றோம்.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டி ருக்கின்ற உயர் திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்களே, தங்கள் செயற்றிறனையும், முகாமைத்துவ உத்திகளையும் அறியாதார் கல்வியுலகில் இல்லையெனலாம். தென்மராட்சிக்கு தாங்கள் வந்ததிலிருந்து அயராது திட்டமிட்டு உழைத்து இப்பிரதேச பாடசாலைகளின் திறனை ஏனைய பிரதேசங்களுக்கு முன்னோடி

யாக்கியுள்ளீர்கள், கற்றல் - கற்பித்தல் செயற்பாடு, ஆசிரிய, மாணவ தலைமைத்துவச்செயற்பாடு, நாட்டின் உறவுப்பாலச் செயற்பாடு , இணைப்பாடச்செயற்பாடு என தங்கள் பணி நீண்டாலும் இவை யாவற்றிலும் மேலாக ஆவணப்பதிவு மேற்கொள்ளல் கூட முன்மாதிரியாகத்தான் காணப்படுகின்றன. அவ்வகையில் எமது பாடசாலைக்கும் தேவையான ஆசிரிய ஆளணியினரை ஒதுக்கித்தந்தும், தங்களால் நெறிப்படுத்தப்பட்ட மாணவர் பாராளுமன்ற கோரிக்கைகளை செவிசாய்த்து சுகாதார அலகு,குடிநீர் வசதி மேற்கொள்ள வேல்ட்விஷன் நிறுவனம் மூலம் வழியேற்படுத்தித் தந்தமையினை நன்றியுடன் பதிவு செய்து எமது சமூகம் சார்பாக வாழ்த்தி வருக வருக என கரம்கூப்பி வரவேற்கின்றோம்.

கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வேல்ட் விஷன் யாழ் மாவட்ட திட்ட இணைப்பாளர் திரு.சி.குகன் அவர்களே, தாங்கள் தமது அமைப்பினூடாக பல்வேறு செயற்றிட்டங்களையும் ஆற்றி வருவதனை பயன் பெற்றவர்கள் நன்றியோடு போற்றுகின்றனர். அவ்வகையில் எமது மாணவர் பாராளுமன்ற விண்ணப்பத்திற்கேற்ப வலயக் கல்வி அலுவல நெறிப்படுத்தலில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான சுகாதார மயப்படுத்தப்பட்ட இயற்கையுபாதையறை, மழை நீர் சேகரிப்பு கொள்கலன் ஆகியவற்றை அமைத்துத்தந்துள்ளீர்கள், இதன் மூலம் பயன்பெறும் ஒவ்வொருவரும் அடையும் மகிழ்வு தங்களுக்குச் செலுத்தும் நன்றியே எனின் அது மிகையில்லை. ஆதலால் தங்களையும் மகிழ்வோடு இந்நிகழ்விற்கு வருக வருக என வரவேற்கின்றோம்.

கௌரவ விருந்தினர்களில் ஒருவராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வேல்ட் விஷன் நிறுவன தென்மராட்சி பிரதேச

அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் திரு.கி.றொசைறோ அவர்களே தங்களின் கல்விக்கான செயற்றிட்டப்பணிகளை தென்மராட்சிப் பாடசாலைகள் நன்கறியும். அவ்வகையில் எமது பாடசாலைக்கு மாணவர்களின் நலன்கருதி வலயத்தால் அமைக்கப்பட்ட ஆங்கில செயற்பாட்டறைக்கு தேவையான உபகரண வசதிகளை வழங்கியமை காலத்தின் தேவையானது. அண்மைக்காலமாக ஆங்கிலத்தில் ஆர்வம் காட்டி வரும் எமது மாணவர்களின் செயற்பாட்டிற்கு இது வளம்சேர்க்கும் என கூறி தங்களை அன்பு பாராட்டி வருக வருக என வரவேற்கின்றோம்.

மீண்டும் எம் நிகழ்வை பெருமை சேர்க்க தங்கள் வரவைப் பதிவு செய்த அனைத்து நல்லுள்ளங்களையும் வரவேற்பதில் புளகாங்கிதமடைந்து 2015ம் ஆண்டிற்கான பரிசில்நாள் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

## ஆசிரியர் ஆளணி விபரம்

| | |
|---|---|
| பட்டதாரிகள் | 18 |
| விசேட பயிற்சி பெற்றோர் | 16 |
| கற்பித்தலில் தேசிய டிப்ளோமா | 05 |
| ஒப்பந்த அடிப்படை | 01 |
| மொத்தம் | **40** |

# மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 – 5 | 127 | 135 | 262 |
| 6 – 9 | 097 | 109 | 206 |
| 10 –13 | 105 | 113 | 218 |
| மொத்தம் | 329 | 357 | 686 |

# தரம் - 5 புலமைப்பரிசில் - 2015

| விபரம் | தொகை | வீதம் |
|---|---|---|
| தோற்றியோர் | 40 | |
| தகுதி பெற்றோர் | 01 | 03% |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 26 | 65% |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | 15 | 38% |

# க.பொ.த சாதாரணதரப் பரீட்சை - 2015

| விபரம் | தொகை |
|---|---|
| தோற்றியோர் | 58 |
| சித்தியடைந்தோர் | 23 |
| சித்தி வீதம் | 40% |

# க.பொ.த உயர்தரப் பரீட்சை - 2015

| விபரம் | தொகை |
|---|---|
| தோற்றியோர் | 20 |
| சித்தியடைந்தோர் | 15 |

# பொது முகாமைத்துவம்

"இயற்கை எனது வழிகாட்டி" என அனுபவ அறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். ஏதோ ஒரு இலக்கை நோக்கி இயற்கையின் அங்கங்கள் யாவும் தொழிற்பட்டுக் கொண்டிருக் கின்றன. இலக்குகளின்றிய இயக்கங்கள் எவையுமே இல்லை யெனலாம். மாறாக இயக்கின்றிய இலக்கங்கள் பயனற்ற வையாகவே மதிப்பிடப்படுகின்றன.

பாடசாலையிலும் குறிப்பிட்ட தேசிய, பாடசாலை இலக்கினையெய்துவதற்காக கற்றல் கற்பித்தல் செல்நெறியை கொண்டு செல்ல திட்டமிடல், ஒழுங்கமைத்தல் வழிநடத்துதல், கட்டுப்படுத்தல் ஆகிய ஒழுங்குமுறையில் பேணுவதே பொது முகாமையாகும்.

சார்பு - சார்பின்மை, நேர் - எதிர் எனும் இருமுகமுடைய மனங்களை அளந்தறிந்து இலக்கினை நோக்கி நகர்த்தும் உத்தி பொதுமுகாமையின் பிரதான அங்கமாகும்.

"மாற்றங்கள் ஒன்றே மாறாதது" எனும் கோட்பாட்டி னடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக மனங்களில் மாற்றத்தையேற்படுத்தி இயங்கு நிலைக்குட்படுத்தி மனிதர்களை ஒரு மனிதன் ஆளப் பயன்படும் கலையே பொது முகாமையாகும்.

தடைகளைத் தகர்த்து வெற்றிக்கனிகளை நுகரத் திட்டம் தீட்டி வேலைகளைப் பகிர்த்து ஒத்திசைந்து இயங்க வைப்ப திலேயே பொதுமுகாமையின் வெற்றிதங்கியுள்ளது.

அவ்வகையில் நேர்மனப்பாங்குடைய ஆசிரியப் பெருந்த கைகள் இணைந்து செயற்பட்டு பொதுமுகாமைக் குழு என எம்பள்ளியின் மேம்பாட்டிற்காக உழைப்பது பாராட்டிற்குரியது. ஆதலால் இவர்களை பாராட்டுவதில் பெரும் உவகையடை கின்றேன்.

"பலவினைகளை இணைகளாக்கி திட்டமிடலால் பலம் பெறுவோம்"

# பௌதீக மனிதவள முகாமை

பௌதீக ஒழுங்கமைப்பில் சீராக இயங்குவதே உலகாகும். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என பழமொழி கூறும் பாடசாலையும் அவ்வாறானதேயாம். இதனால் பாடசாலை யிலுள்ள பொது வளங்களைச் செவ்வனே பயன்படுத்தி எம் மாணவர்களின் திறன் களை வெளிக் கொணர எமது முகாமை முயன்று கொண்டேயிருக்கின்றது.

மாறிவரும் உலகிற்கேற்ப எமது பிள்ளைகளையும் மாற்றவேண்டியது எமது பாடசாலை முகாமையின் பிரதான கடமையாகும். உலகமாற்றங்களைப் புரிந்து கொள்ள ஆங்கில அறிவு இன்று இன்றியமையாததாகின்றது. ஆங்கிலக்கல்வி வேப்பங்காயாக காணப்படுவதனையுணர்ந்து எமது தலைமை ஆங்கிலக்கல்விக்கான செயற்பாட்டறை அலகினை, மாணவர் பாராளுமன்ற பௌதீக மன்றும் சுகாதார அமைச்சின் கோரிக்கையாக முன் வைக்க வழிப்படுத்தியதன் பயனாக பெற்றிருக்கின்றோம். இது மாணவர்களின் ஆங்கில அறிவில் பெருமாற்றத்தையேற்படுத்தும் என நம்புகின்றோம்.

சுயதேடலும் சிந்தனையாற்றலும் மேம்படுவதற்கேற்ற முறையில் கற்றல் வளநிலையம் மாற்றப்பட்டுக்கொண்டு வருகின்றது. எணணக்கருக்களை இலகுவாகப் புரிந்து கொள்வதற்காக முப்பரிணாம நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இலகுவாகக் கற்பதற்காக தொங்கு நூலகம், நடமாடும் நூலகம், ஓரிரவு இரவற்சேவை என பணிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பலனாக வலயமட்ட கற்றல் வள நிலையங்களுக்கிடையிலான போட்டியில் முதலாமிடத்தினை கற்றல்வளநிலையம் தனதாக்கிக் கொண்டுள்ளது.

"அனுபமே ஆசான்" எனும் கீழைத்தேச முதுமொழியை "டூயி" போன்ற கல்வியியலாளர்களும் வலியுறுத்தியுள்ளனர். இதனை மெய்ப்பிப்பதற்கு விஞ்ஞான ஆய்வு கூடம் முயற்சித்து வருகின்றது. மாணவர்கள் தாமாகவே செயற்பட்டு அனுபவத் தினைப் பெறக்கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன்

நவீன கற்பித்தல் சாதனங்களான "பல்லூடக எறியி" "மேந்தலை எறியி" போன்றனவும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் வலய, மாகாண பாராட்டுதல்களை தமதாக்கி விஞ்ஞான ஆய்வு கூடம் செயற்பட்டு வருகின்றது.

ஆயினும் சங்கீதம், கணிதம், சித்திரம், விவசாயம், கணினி போன்ற செயற்பட்டு கற்க வேண்டிய பாடங்களுக்கான செயற்பாட்டறைகள் இல்லாமை குறைபாடாகவேயுள்ளது.

வகுப்பறைகள் போதிய காற்றோட்ட, ஒளி வசதிகளற்றுக் காணப்படுகின்றமை பெருங்குறைபாடாகவே உள்ளது. அதே போல ஒன்று கூடல் நிகழ்வுகளிற்காக வகுப்பறைகள் பயன் படுத்தப்படுவதினால் கற்றல் கற்பித்தலுக்கு இடர்பாடாகவே காணப்படுகின்றது. இதனை நிவர்த்திப்பதற்கு ஆகக்குறைந்தது 110' x 20' அளவு கொண்ட இருமாடிக்கட்டடம் ஒன்றாவது அவசிய தேவையாகவுள்ளது என்பதனையம் கூற விரும்புகின்றேன்.

எமது ஆளணியில் 40 நிரந்தர ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதோடு ஒன்றிணைந்து செயற்பட்டு இவ்வாறான நிகழ்வுகளையும் வெற்றிக்கரமாக கொண்டாடுவதற்கு பக்கபலமாக இருக்கின்றார்கள் இவர்களோடு கல்விசாரா ஊழியர்களான திரு.செ.அழகராசா, திரு.சி. இராசேந்திரம், திரு.நா.சதீஸ்குமார், திருமதி.ய.நந்தபாலா ஆகி யோரும் தோன்றாத் துணையாகச் செயற்பட்டு வருகின்றனர்.


"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று - ஆய்ந்து
அதனை அவன் கண்விடல்"

(குறள்)

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD)

"கலைத்திட்ட முகாமையாளர்" எனப்படும் ஆசிரியர்களே மாறி வரும் கல்விச்சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துபவர்கள் ஆவர். இதனால் மாறிவரும் கல்வி பற்றிய சிந்தனைகளை ஆசிரியர் களுக்காக்கி அவற்றை மாணவர்களிடம் சேர்க்க நடைமுறை யிலுள்ள இத்திட்டத்தின் மூலம் உள்ளக மதிப்பீடு, தரவட்டாங்கள், கலந்துரையாடல்கள், மூலம் பெற்ற தேவைகளை யறிந்து ஆசிரியர்களின் வாண்மையினை மேம்படுத்துவதற்காக வகுப்பறை முகாமை, விளையாட்டு நுட்பம், விதிமுறைகள், PSI தொடர்பான விளக்கங்களுக்காக பொருத்தமான வளவாளர்களை அழைத்து செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"மாற்றங்களை ஏற்று மாற்றங்கள் காண்போம்"



# ஆசிரிய ஆளணி

| No | Teacher's Name | Grade | Qualification |
|---|---|---|---|
| 01. | Mr.S.Pavalakumaran | SLPS - 1 | **B.Ed, Sp.Trd Science** |
| 02 | Mrs.S.Selvarajah | SLTS - 1 | **BA, Dip in Edu** |
| 03. | Mrs.K.Anpalagan | SLTS 3-1 | **BA** |
| 04. | Mrs.I.Sivakurunathan | SLTS 2-11 | **Primary Trained** |
| 05. | Mrs.P.Angashan | SLTS 2-11 | **BA, Dip in Edu, Primary Trained** |
| 06. | Mrs.S.Nadarajakumar | SLTS - 1 | **BA, Dip in Edu** |
| 07. | Mrs.K.Selvamoorthy | SLTS 3-1 | **BFA(Music)** |
| 08. | Mrs.K.Annamalai | SLTS 2-11 | **BFA(Music), Dip in Edu** |
| 09. | Mrs.R.Rajadurai | SLTS 2-11 | **BA, Dip in Edu** |
| 10. | Mrs.Asha Damayanthi | - | **Dip in Sinhala Contract** |
| 11. | Mrs.I.Nithiyanantharajah | SLTS 2-11 | **BA, Dip in teaching Primary** |
| 12. | Mrs.V.Somasekaram | SLTS - 1 | **BA, Dip in Edu, M.Ed, Science Trained** |
| 13. | Mrs.S.Sivakumar | SLTS 2-11 | **Dip in teaching Home Economics, B.Ed** |
| 14. | Mrs.S.Srikanthan | SLTS 2-1 | **BA, Dip in Ed** |
| 15. | Mrs .V.Selvakumar | SLTS 2-1 | **B.com, Dip in Edu** |
| 16. | Miss.K.Vasanthan | SLTS 2-11 | **Dip in teaching Primary** |
| 17. | Mrs.M.Abraham | SLTS 3-1 | **Primary Trained** |
| 18. | Mrs.J.Srikaran | SLTS 2-11 | **Primary Trained** |
| 19. | Mrs.V.Subaschandrabose | SLTS 2-1 | **B.com, Dip in Edu** |
| 20. | Mrs.N.Thanikasalam | SLTS 2-1 | **BA, Dip in Ed, M.Ed** |
| 21. | Miss.Y.Nadarajesunderam | SLTS 2-1 | **Sp.Trd English, BA, Dip in Ed, PGD in (TESL)** |

| | | | |
|---|---|---|---|
| 22. | Mr.K.Murale | SLTS 3-1 | B.C.A |
| 23. | Mr.K.Tharmarasa | SLTS 2-11 | BA, Dip in Edu |
| 24. | Mr.S.Sutharsan | SLTS 2 - 11 | BA, Dip in Edu |
| 25. | Mr.S.Jebanesan | SLTS 2-1 | B.Ed, Sp.Trd R.c |
| 26. | Mr.R. Suthan | SLTS 2-1 | B.Ed , Primary Trained |
| 27. | Mr.S. Saththiyasagebaba | SLTS 2-11 | BA, Dip in Edu |
| 28. | Mr.I.Theivendran | SLTS 2-1 | Sp.Trd Agriculture |
| 29. | Mr.T.Mathiparan | SLTS 2 -11 | BA, Dip in Edu, Dip in teaching Social studies |
| 30. | Mr.S.Selvaranjan | SLTS 2-1 | BA, Sp.Trd Maths, Dip in Edu |
| 31. | Mr.T.Thulasikaran | SLTS 2-11 | BFA(Art), Dip in Edu, Dip in Counselling, Dip in Human Rights |
| 32. | Mr.P.Srikanthanesan | SLTS 2-1 | BA, Dip in Edu, M.Phil.Q |
| 33. | Mrs.K.Sivananthan | SLTS 2-11 | Dip in Dance, Dip in Edu |
| 34. | Mrs.K.Ketheeswaran | SLTS 2-1 | BA, Dip in Edu, Primary Trained |
| 35 | Mr.S.Sivathasan | SLTS 2-1 | Primary Trained, BA, Dip in Edu, M.Ed |
| 36 | Mrs.T.Mahadevan | SLPS III | Science Trained, BA, Dip in Edu |
| 37 | Mrs.V.Sasikaran | SLTS 3 - 11 | Primary Trained |
| 38 | Mrs.G.Makinhan | SLTS 3 - 1 | Sp.Trd English |
| 39 | Mr.P.Kirubananthan | SLTS 2 - 11 | Primary Trained |
| 40 | Mr.P.Sakilan | SLTS 2 -11 | BA, Dip in Edu, Dip in teaching Phy Edu |
| 41 | Miss.E.Viththaki | SLTS 3 - 1 | B.Sc |

# இடம்மாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்

1. திரு.சி.நித்தியானந்தராசா
2. திரு.நா.கேதீஸ்வரன்
3. திரு.சி.சிவானந்தராசா
4. திரு.த.சிவகுமார்
5. திரு.இ. மகேந்திரராசா
6. திருமதி. த.ஜீவபாலன்
7. செல்வி.ச.தயாநிதி
8. திருமதி.சு.வசீகரன்
9. திருமதி.நா.செல்வன்
10. திருமதி நா.செல்வன்
11. திருமதி .சி.தேவராசா
12. திருமதி.ஞா.மரியநாயகம்
13. திருமதி பி.தமிழ்ச்செல்வன்
14. திருமதி.சி.சிவசரணநாதன்
15. திருமதி.குகராஜ்
16. திருமதி.த.சசீஸ்வரன்
17. செல்வி.க.சந்திராதேவி
18. திருமதி.த.தீபன்

இவ்வாசிரியர்கள் எமது பாடசாலைக்கு வழங்கிய சேவையைப் பாராட்டுவதோடு எதிர்காலம் சிறப்புற இறையாசி வேண்டிய பிரார்த்திக்கின்றேன்.

# இடமாற்றம் பெற்று வந்தோர்

1. திரு.பெ.ஶ்ரீகந்தநேசன்
2. திரு.செ.செல்வறஞ்சன்
3. திரு.ப.கிருபானந்தன்
4. திரு.தி.துளசிகரன்
5. திரு.சி.சிவதாசன்
6. திரு.பொ.சகிலன்
7. செல்வி. ய.நடராச சுந்தரம்
8. திருமதி.க. சிவானந்தன்
9. திருமதி கோ. கேதீஸ்வரன்
10. திருமதி வெ. சுபாஸ்சந்திரபோஸ்
11. திருமதி.ந.தணிகாசலம்
12. திருமதி.த.மகாதேவன்
13. செல்வி.வி.ஏகாம்பரம்
14. திருமதி.வி. சசிகரன்

# புதிய நியமனம் பெற்றோர்

1. செல்வி.ஏ.வித்தகி

இவ்வாசிரியர்கள் ஆற்றி வருகின்ற சேவைகளைப் மதித்து எமது பாடசாலைக்கு வாஞ்சையோடு வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

# பதவி உயர்வு பெற்றோர்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி தனுசியா மகாதேவன் நடந்து முடிந்த அதிபர் சேவை தரம் – III இல் சித்தியடைந்து பதவியுயர்வு பெற்றுள்ளார். இவரைப்பாராட்டி வாழ்த்துவதோடு எதிர்காலத்தில் சமூகம் வளம் பெற இவரது நலன் வேண்டி இறைவனைப் பிராரர்த்திக்கின்றேன்.

# வாண்மை விருத்தி பெற்றோர்

*பட்டப்பின் கல்வி டிப்ளோமா*

1. திரு.செ.செல்வறஞ்சன் 2. திருமதி.கே.அன்பழகன்

*முதுகல்விமாணி*

1. திருமதி.வ.சோமசேகரம்

*முதுகலைமாணியை கற்று கொண்டிருப்போர்*

1. திரு.சி.சிவதாசன் 2. திரு.S.சத்தியசாயிபாபா
3. திருமதி.வி.செல்வகுமார்

# ஓய்வு பெற்றுச் சென்றோர்

1. திருமதி.வ.மேகலிங்கம் 2. திருமதி.கோ.சந்திரகுமார்

நாவற்குழி மகா வித்தியாலய வரலாற்றில் அதிக காலம் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக, க.நி.சே.அதிகாரியாக பதவி வகித்து பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர் திருமதி.வ.மேகலிங்கம் அவர்கள். இவரது பணி சமூகத்திற்கு

நன்கே தெரியும். இவரது நீண்டகாலப் பணியில் பாடசலை அதிக பௌதீக வளங்களையும் நல்வெளியீடுகளையும் பெற்றுக் கொண்டது. தற்பொழுது ஓய்வு பெற்றுள்ள இவர் நலனோடு வாழ இறைதாள் வழுத்துகின்றேன்.

அதே போல திருமதி கோ.சந்திரகுமார் ஆசிரியை எமது பாடசாலையில் மனைப் பொருளியற் பாடத்தில் அளப்பெரும் சேவையாற்றியுள்ளார். அவரையும் வாழ்த்தி ஓய்வு காலத்தில் வளமோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

## கல்விசாரா ஊழியர் விபரம்

| | | |
|---|---|---|
| 01. திரு.சி.இராஜேந்திரன் | - | ஆய்வுகூட உதவியாளர் |
| 02. திரு.செ.அழகராஜா | - | இரவுநேர கண்காணிப்பாளர் |
| 03. திரு.நா.சதீஸ்வரன் | - | பாடசாலைத்தொழிலாளி |
| 04. திருமதி.ய.நந்தபாலர் | - | பாடசாலைத்தொழிலாளி |



# முறையான கலைத்திட்ட முகாமை

கலைத்திட்டம் தேசிய பொதுக்குறிக்கோள்களையும் அடிப்படைத் தேர்ச்சிகளையும் அடையும் வண்ணம் அமுல் படுத்தப்பட்டுவருகின்றது. வகுப்பறையின் வினைத்திறனான செயற்பாட்டையதிகரிப்பதற்காக அதிபரும், பிரதி அதிபரும், பகுதித் தலைவர்களும் மேற்பார்வை செய்துவருவது குறிப்பிடக் கூடியது. மாணவர்களது. தேர்ச்சிகளை உடன் கணிப்பிடுவதற்காக பாடசாலை மட்ட கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கணிப்பீட்டு செயல்நிலை மாதிரிச்சந்தை, சஞ்சிகையாக்க கண்காட்சி, சூழலோடு செயற்பட்டு மகிழ்வோம் ஆகியன நிகழ்ந்தேறியுள்ளன.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு - இல்லை
அதிர வருவதோர் நோய்"



# இணைபாடவிதான செயற்பாடுகள்

மாணவர்களின் சமநிலையாளுமையில் மறை நிலைக் கலைத்திட்டம் பெரும்பங்கு வகிக்கின்றது. இதற்காக கைகொடுப்பது இணைபாடவிதான செயற்பாடுகளாகும். அவ் வகையில் மாணவர்களின் தலைமையில் காலைப்பிரார்த்த னைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன.

மும்மொழிப்புலமையை வளர்ப்பதற்காக இரண்டு நாட்கள் ஆங்கிலத்திலும் ஒரு நாள் சிங்களத்திலும் ஆராதனை இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மன்றங் களின் செயற்பாடு மிக இன்றிமையாததாகும். அவ்வகையில் பல்வேறு மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.

மாணவர் பாராளுமன்றம் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. இது அவர்களின் திறமையை வெளிக்காட்டமட்டுமல்லாது பாடசாலையின் பௌதீக வளங்கள் பெறுவதற்கும் ஏற்ற வல்லமை உள்ளதாக வளர்ச்சிய டைந்துள்ளது. இதன் செயற்பாடுகளின் சிறப்பினால் விருதி னையும் தற்பொழுது பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்துமாமன்று வருடந்தோறும் இடம்பெறும் சமய குரவர்களின் குருபூசைதினங்கள், நவராத்திரி விழா போன்ற வற்றை ஒழுங்கமைத்து போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி மாணவர்கள் பண்பாட்டு விழுமியங்களை அறிவதற்கு வழியேற் படுத்துகின்றது.

அதேபோல கிறிஸ்தவ மன்றம் வருடந்தோறும் பாட சாலையில் ஒளி விழாவினை செவ்வனே கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது.

சாரணீயம் எமது மாணவர்களுக்கு கிடைத்த அருங் கொடையாகும். இவர்கள் பாடசாலையில் இடம்பெறுகின்ற பெரும் விழாக்களில் தமது கடமைகளை வழங்கி வருகின்றனர். இவர்கள் இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்த சர்வதேச ஜம்போறி யிலும் பங்குபற்றி அனுபவங்களைப் பெற்றதோடு சான்றிதழ் களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடக்கூடியது.

மேலைத்தேச வாத்திய அணியினர் எமது பாடசாலையின் நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதற்கு தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். அத்தோடு அயற்பாடசாலை, நிறுவனங் களின் அழைப்பின் பேரில் கற்றலுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அவர்களின் நிகழ்வுகளையும் களைகொள்ள துணை செய்கின்றனர்.

சுகாதாரக் குழவினர் மாணவர் நலனில் அக்கறை கொண்டு கண், பற்சுகாதாரம், போஷாக்கு போன்றவற்றை அவதானித்து பாதிப்பிற்குள்ளோருக்கு பரிகாரங்களையும் மேற்கொள்ள ஆவணசெய்கின்றனர்.

மாணவர் முதல்வர்கள் அணி பாடசாலையின் சுற்றாடற் சுகாதாரம், ஒழுக்கம், கட்டுப்பாடு , ஆராதனை போன்றவற்றில் தமது பங்களிப்பை ஆற்றி வருகின்றனர்.

விளையாட்டுக்குழு வலயமட்ட மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றி 14 முதலிடங்களையும், 12 இரண்டாமிடங்களையும் , 13 மூன்றாமிடங்களையும் பெற்று பெருமை சேர்த்துள்ளனர். உதைப்பந்தாட்டப்போட்டியில் 17 வயதுப்பிரிவினர் முதலா மிடத்தினையம் 19 வயதுப்பிரினர் இரண்டாமிடத்தினையம் வலயத்தில் பெற்று பெருமைசேர்ந்துள்ளனர்.

தமிழ்மன்றத்தினர் மாணவர்களுக்கான ஆரம்ப, இடைநிலை, உயர் மன்றங்களை அமைத்து, மாதத்தில் இரு வெள்ளிக்கிழமைகளில் நடாத்த வழியேற்படுத்தியுள்ளனர்.

அத்தோடு தமிழ்மொழித்தின போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்கவும் வழியேற்படுத்துகின்றனர். அவ்வகையில் குழு இசை மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடக் கூடியது.

ஆங்கிலமன்று துடிப்புடன் செயற்பட்டு ஆராதனைகளில் மாணவர்களை பங்குபற்ற ஆவன செய்து வருகின்றது. இதனால் இருதினங்கள் ஆங்கிலமொழி மூலம் ஆராதனையிடம் பெறுவது பாராட்டிற்குரியது. வலய, மாகாண மட்டங்களில் மாணவர்கள் பங்குபற்றி பரிசில்கள் பெறவும் வழிகாட்டப்படுகின்றது.

ஆதலால் இணைப்பாடவிதான செயற்பாடுகள் யாவற்றி ற்கும் பொறுப்பாகவிருந்து மாணவர்களை வழிப்படுத்தும் அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுத்தந்த மாணவர்களையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

" யாதானும் நாடாமல் ஊராமல் - என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

(வள்ளுவம்)

# மாணவர் அடைவு மட்டம்

கல்லூரியின் பெருமை மாணவர்களின் ஆற்றல் வெளிப் படுத்தல்களாலேயே வெளித்தெரியும் அவ்வகையில் எமது மாணவர்கள் பாடசாலைக்கு பெருமை சேர்த்து வருகின்றார்கள். க.பொ.த சா/த பரீட்சையில் 42 பேர் தோற்றி க.பொ.த உயர் தரத்திற்கு 22 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதில் செல்வன் சு.சுபாஸன், 8AB பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்குப் பெருமைசேர்த்துள்ளான். இதில் வணிகம் புவியியல், சங்கீதம், நடனம், ICT, சுகாதாரம் ஆகிய பாடங்கள் 100 சதவீத சித்தியைப் பெற்றுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் வணிகப் பிரிவில் 2A1C பெற்று செல்வன் கோ.அரவிந்தன் இன்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடக்கூடியது. இவ்வாண்டில் 15 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருந்தமையும் குறிப்பிடக் கூடியது. இதில் பொருளியல், வணிகக்கல்வி, கணக்கியல், இந்துநாகரிகம், நடனம், கிறிஸ்தவநாகரிகம், வரலாறு, சங்கீதம் ஆகிய பாடங்கள் 100% சித்தியினைப் பெற்றுள்ளன.

"செல்லான் கிழவன் இருப்பின் - நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"

(வள்ளுவம்)



# பாடசாலை சமூக உறவு

சமூகம் எனும் பெரும் நிறுவனத்தின் ஒரு சிறிய அலகாக பாடசாலை காணப்படுகின்றது. பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பதில் பாடசாலை இன்றியமையாத பங்கினைக் கொண்டுள்ளது. இதனால் பாடசாலை, சமூகத்துடன் நல்ல இடைவினையுறவை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளது.

பாடசாலையின் நிகழ்வுகள் வெளிப்படைத் தன்மை கொண்டவையாக பெற்றோர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடக் கூடியது.

பாடசாலை ஒழுக்கம், மாணவர் வரவு, உடையலங்காரம் ஆகியவை நிர்வாகமட்டத்தில் கலந்துரையாடி பின் அபிவிருத்திக் குழு தீர்மானத்தோடு இணைந்து நடைமுறைப்படுத்தப்படு கின்றது. இத்தீர்மானங்கள் ஒழுக்கக்கோவையாக பாடசாலையின் வகுப்பறை ஒவ்வொன்றிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர் பாராளுமன்றின் இந்து அமைச்சு 22.02.2016 அன்று வேலன்பராய் கண்ணகியம்மன் ஆலயத்தில் சிரமதானப் பணியினை மேற்கொண்டது.

நல்லூரிலிருந்து திருக்கேதீஸ்வரம் நோக்கி யாத்திரை சென்ற குழுவினர் பாடசாலைக்கு வருகைதந்தபோது அவர் களுடனிணைந்து பஜனை வழிபாட்டிலீடுபட்டதுடன் அவர்களுக்கு தாக சாந்தியளித்து உதவியுள்ளோம்.

சுகாதார மேம்பாட்டுக்கழகத்தினர் போசாக்கு வாரத்தினை முன்னிட்டு பெற்றோர்களையும் இணைத்து பாடசாலையில் சிரமதானப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வேலம்பிராய் கண்ணகியம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த சிவராத்திரி பஜனை நிகழ்வில் மாணவர்கள் பங்குபற்றி சிறப்பித்துள்ளனர். அதேபோல ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளையும் ஈட்டியுள்ளனர்.


கிறிஸ்தவப்பிள்ளைகள் தவக்கால தியான காலத்தில் நாவற்குழி அந்தோணியார் தேவாலயத்தில் தவக்கால தியானத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலை நிர்வாகம் அயலிலுள்ள சமூக நிறுவனங்களுடன் நல்லதொடர்பினைப் பேணிவருகின்றது. குறிப்பாக அரிமாக்கழகத்தினை குறிப்பிட முடியும். பாடசாலைக்கு வரும் அழைப்புக்களையேற்று நிகழ்வுகளில் பங்குபற்றுவதன் ஊடாக சமூக உறவு மேம்படுத்தப்படுகின்றது.

பௌத்த கலாசார நிகழ்வுகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி பாராட்டுக்களை மட்டுமன்றி ஊக்கிவிப்பு பரிசில்களையும் தமதாக்கியுள்ளமை குறிப்பிடக்கூடியது.

"செயற்கை அறிந்தக் கடைத்தும் - உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

(வள்ளுவம்)



# பாடசாலை, சமூக இடைவினையுறவின் பயனாக பாடசாலை பாடசாலைக்கு கிடைத்த அன்பளிப்புகள்

01. வேலன்பிராய் கண்ணகியம்மன் ஆலயம்:

1 கணினி, 15 வகுப்பறைத் தடுப்புகள்

02. உபதபாலதிபர் திருமதி கவிதா:

முதல்வர் அறைக்கான நிலவிரிப்பு

03. ஆளுணர்:

பில்றர்

04. ஶ்ரீ.நிசாந்தன் (பழைய மாணவன்):

அலுவலக கோப்பு அலுமாரி 1

05. லயன் பரணிதரன் அமரர் சின்னத்துரை ஞாபகார்த்தமாக:

தரம் 5B மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்

07. லயன்ஸ் கழகம்:

வறிய மாணவர்களுக்காக 80 சோடி பாதணிகள்

08. திரு.மகேந்திரம் ஆசிரியர் குடும்பம்:

விளையாட்டுப்போட்டிக்கான அனுசரனை

09. தரம் ஒன்றைச்சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள்:

அவ்வகுப்புகளுக்கான 2 உருக்கு அலுமாரிகள்

10. கல்வியமைச்சு:

கற்றல் வள நிலையத்திற்காக 70,000 ரூபா பெறுமதியான புத்தகங்கள்

11. மேனாள் அதிபர் திருவாட்டி வசந்தாதேவி மேகலிங்கம் ஊடாக புலம் பெயர் நலன் விரும்பி ஒருவர் 15 பிள்ளைகளுக்கு தலா 5000 ரூபா வீதம் 75000ரூபா

## எதிர்நோக்கப்படும் சவால்கள் + தேவைகள்

- ❖ போதிய திறமையுள்ள ஆசிரியவளம் காணப்படுகின்ற போதும் அவர்களை பயன்படுத்தக்கூடியமான நிலையிலுள்ள மாணவர்கள், பெற்றோர்கள் காணப்படாமை.
- ❖ இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன.
  - வறுமையான குடும்பச்சூழல்
  - பெற்றோருக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வின்மை
  - பொருத்தமற்ற சகபாடியுறவு
  - இவைகாரணமாக பாடசாலை வரவில் வீழ்ச்சி
- ❖ வரமின்மை காரணமாக பாடங்களில் நாட்டமின்மை
- ❖ இவையாவற்றின் காரணமாக குறித்த அடைவை எட்ட முடியாமை.
- ❖ பாடசாலை ஒழுங்காக வரும் மாணவர்களின் கற்லுக்கேற்ற வகுப்பறைகள் இன்மை
  - தொகுதிப்பாடங்களுக்கான வகுப்பறையின்மை
  - செய்முறைக்கற்றலுக்கான கட்டட வசதியின்மை
    - கட்டுபுலசெவிப்புல அறை
    - சாங்கீத அறை
    - கணினி அறை
- ❖ ஒன்றுகூடலுக்கான பொருத்தமான மண்டபமின்மையால் விழாக்களின் போது வகுப்பறைகள் குழம்புவதுடன் சொத்துச் சேதங்களும் ஏற்படவாய்ப்பாகின்றது.

இவையாவற்றையும் நேர்மனதோடு எதிர்கொண்டு எதிர் கால சந்ததியை வளமுடையோராக்குவதற்கு நாம் அனைவரும் இணைவோம். இறைவனும் இதற்கு துணைபுரிவான் என நம்பகின்றோம்.

# நன்றி நவிலல்


எமது பரிசில் நாள் நிகழ்வை சிறப்புற நடாத்த நற்சூழ்நிலையை ஈந்தளித்த இறைவனுக்கு முதற்கண் நன்றிகள்.

இந்நிகழ்வு சிறப்புற அமைய ஒத்துழைத்த ஆசிரியப் பெருந்தகைகள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பரசில் நாள் நிகழ்வை சிறப்புற நிகழ்த்த நிதி வள்ளண்மையீந்த அனைத்து உள்ளங்களையும் பெரு மனதோடு நினைத்து நன்றிகள் நயக்கின்றோம்.

எம் அழைப்பை ஏற்று வருகைதந்து, எம்மழலைகள் மகிழ்வுற ஏற்றஞ்செய்த முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு அயற் பாடசாலை அதிபர்கள், நலன் விரும்பிகள், கிராம சேவையாளர், பெற்றோர்கள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் நன்றி நயந்து இந்நாளினை மகிழ்வோடு நிறைவு செய்வோம்.

நன்றி.



# பரிசு பெறும் மாணவர் விபரம் - 2015

## தரம் 1 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

1. நி.மேதிகா
2. சௌ.மமிசா
3. சி.சபீசன்
4. பி.தனுக்ஷாந்
5. ர.மதுசன்
6. ஜெ.க்ஷம்சன்
7. வி.வைஸ்ணவி
8. ஜ.அதிஸ்டதரணி
9. ர.லக்சிகா
10. தீ.திலக்சனா

## தரம் 2 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

11. நி.அன்பானுகா
12. ர.அனுசியா
13. ஜீ.இயலினி
14. தி.அபிசயன்
15. ர.அன்ரனிறெஜிஸ்ரன்
16. உ.பகீரதன்
17. ஸ்ரீ.ஸ்ரீஅபிராமி
18. யோ.தர்க்ஷாணி
19. சு.யதுக்ஷாளினி
20. லெ.ராபட்

## தரம் 3 இல் பரிசு பெறும் மாணவர் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 21 | ஜீ. கெற்சிகா | கணிதம்<br>ஆங்கிலம்<br>கிறிஸ்தவம் | தமிழ்<br>சுற்றாடல் | |
| 22 | தி. அபிநயன் | தமிழ்<br>சுற்றாடல்<br>சைவசமயம் | ஆங்கிலம் | |
| 23 | க. அபிநயா | | | தமிழ் |
| 24 | கே. திரிசா | | | கணிதம் |
| 25 | ம. அக்சயன் | | கணிதம் | சுற்றாடல் |
| 26 | க. அபிராமி | | | ஆங்கிலம் |
| 27 | றொ. நிதுஜனா | | | கிறிஸ்தவம் |
| 28. | சு.ஜான்சிகா | | கிறிஸ்தவம் | |
| 29. | ப.ஹரிசன் | | சைவசமயம் | |

## தரம் 4 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 30. | சௌ. பிரவீனா | தமிழ்<br>சைவசமயம்<br>ஆங்கிலம் | கணிதம்<br>சுற்றாடல் | |
| 31. | சு. கபிநிலா | கணிதம்<br>சுற்றாடல் | தமிழ் | |
| 32. | ஐ.சங்கவி | | | கணிதம்<br>சுற்றாடல்<br>சைவசமயம்<br>ஆங்கிலம்<br>தமிழ் |
| 33. | த.அரிகரன் | | சைவசமயம் | |
| 34. | ர. ரஜிந்தினி | | ஆங்கிலம் | |
| 35. | டி.திவ்வியன் | கிறிஸ்தவம் | | |
| 36. | ஜெ.ஜெயடினோஜன் | | கிறிஸ்தவம் | |
| 37. | கூ. அபிஷேக் | | | கிறிஸ்தவம் |

## தரம் 5 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 38. | சி. நீதிராஜா | தமிழ்<br>கணிதம்<br>சுற்றாடல்<br>ஆங்கிலம் | | |
| 39. | ச. மீனுஜா | சைவசமயம் | தமிழ் | சுற்றாடல் |
| 40. | ம. மதிசன் | | | தமிழ்<br>ஆங்கிலம் |
| 41. | தே. கிருஷிகன் | | கணிதம்<br>ஆங்கிலம் | சைவசமயம் |
| 42. | ஜ. ஞானக்குமரன் | | | கணிதம் |
| 43. | தீ. லதுர்சன் | | சுற்றாடல் | சைவசமயம் |
| 44. | லெ. சாலேம்ராஜ் | | | சுற்றாடல் |
| 45. | கி. நிதுஜா | | சைவசமயம் | |
| 46. | வி. தர்சிகா | கிறிஸ்தவம் | | |
| 47. | த. தர்சிகா | | கிறிஸ்தவம் | |
| 48. | பு. அபிசா | | | கிறிஸ்தவம் |

## தரம் 6 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 49. | இ. சௌமியா | சுகாதாரம்<br>தமிழ்மொழி | விஞ்ஞானம்<br>சிங்களம் | புவியியல்<br>PTS<br>குடியுரிமை |
| 50. | ஜ. அபிநயா | விஞ்ஞானம்<br>குடியுரிமை<br>நடனம் | தமிழ்மொழி<br>ஆங்கிலம்<br>சுகாதாரம்<br>PTS | சைவசமயம் |
| 51. | ஜீ. பரிசன் | கணிதம்<br>சைவசமயம்<br>சங்கீதம்<br>PTS | தமிழ்மொழி<br>புவியியல்<br>குடியுரிமை | விஞ்ஞானம் |
| 52. | ந. சஞ்சய் | ஆங்கிலம் | கணிதம்<br>சங்கீதம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 53. | இ. சங்கீதன் | | | கணிதம்<br>சுகாதாரம்<br>சங்கீதம் |
| 54. | ஆ. ஜெசிபா | கிறிஸ்தவம் | | ஆங்கிலம் |
| 55. | ச. சோபினி | வரலாறு<br>புவியியல் | | நடனம் |
| 56. | தி.திபேக்சன் | | வரலாறு | |
| 57. | அ. கோபினா | | நடனம் | வரலாறு |
| 58. | செ. மதுஷா | சிங்களம் | | |
| 59. | சி. பவானி | | | சிங்களம் |
| 60. | செ. கலைச்சனா | | சித்திரம் சைவசமயம் | |
| 61. | ஜெ.ஜெயசீலி | | கிறிஸ்தவம் | |
| 62. | உ. மேரிஜெனிற்றா | | | கிறிஸ்தவம் |
| 63. | ம. மதுமிதா | | | |
| 64. | உ. கவிப்பிரிதன் | சித்திரம் | | |
| 65. | அ. நிதுர்ஜன் | | சித்திரம் | |

## தரம் 7 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 66. | ச.நிலானி | நடனம்<br>வரலாறு<br>சுகாதாரம் | தமிழ்<br>கணிதம்<br>விஞ்ஞானம்<br>சைவசமயம்<br>புவியியல்<br>PTS | ஆங்கிலம்<br>குடியியல் |
| 67. | ஜெ.ஒல்வியாடிலக்சினி | ஆங்கிலம்<br>கணிதம்<br>சிங்களம் | கிறிஸ்தவம்<br>நடனம் | வரலாறு<br>தமிழ்<br>புவியியல்<br>PTS |
| 68. | வி.சுவேதா | தமிழ்<br>PTS<br>புவியியல்<br>விஞ்ஞானம்<br>சங்கீதம்<br>சைவசமயம் | வரலாறு<br>ஆங்கிலம்<br>சுகாதாரம்<br>குடியியல்<br>சிங்களம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 69 | ச.வாகீசன் | | | கணிதம்<br>விஞ்ஞானம்<br>சுகாதாரம் |
| 70. | ச. சங்கீதா | குடியியல் | சங்கீதம் | |
| 71. | நி. பானுஜா | கிறிஸ்தவம் | | |
| 72. | சா. வில்பர் | | | கிறிஸ்தவம் |
| 73. | உ. லோஜப்பிரிந்தா | | | சைவசமயம் |
| 74. | சி.சஞ்சித் | | | சங்கீதம் |
| 75. | உ.ஜீவசங்கர் | சித்திரம் | | |
| 76. | சு.மதுஸ்கரன் | | சித்திரம் | |
| 77. | இ.திருஷாந் | | | சித்திரம் |
| 78. | லக்சனா | | | நடனம் |
| 79. | கு.விதுர்சிகா | | | சிங்களம் |

# தரம் 8 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 80. | யோ. சமிதா | தமிழ்மொழி<br>நடனம், PTS<br>சிங்களம்,சுகாதாரம் | விஞ்ஞானம்<br>வரலாறு<br>புவியியல்<br>குடியியல் | சைவசமயம் |
| 81. | சி.பானுஜா | சைவசமயம்<br>ஆங்கிலம் | தமிழ்மொழி | சுகாதாரம்<br>நடனம் |
| 82. | ஜ. உமையாள் | | சைவசமயம் | ஆங்கிலம் |
| 83. | ச. நிசானி | வரலாறு | | தமிழ்மொழி<br>கணிதம் |
| 84. | வி. விதுசா | கிறிஸ்தவம் | | |
| 85. | நா. அபிகா | கணிதம்<br>சங்கீதம்<br>புவியியல் | PTS<br>சிங்களம் | விஞ்ஞானம்<br>வரலாறு<br>குடியியல் |
| 86. | க. கஜீபன் | விஞ்ஞானம் | கணிதம் | |
| 87. | ப. அனுசன் | | சுகாதாரம் | புவியியல் |
| 88. | கி. நிலைக்சனா | குடியியல் | ஆங்கிலம் | |
| 89. | ம. ரமீனா | சித்திரம் | | |
| 90. | நெ. டெல்சன் | | சித்திரம் | |
| 91. | செ. திவாகரன் | | | சித்திரம்<br>PTS |
| 92. | றொ. நிருஜனா | | நடனம் | சிங்களம் |
| 93. | யே. ஜெயசாளினி | | சங்கீதம் | |
| 94. | த. செந்துசா | | | சங்கீதம்<br>கிறிஸ்தவம் |
| 95. | அ.பிளாக் | | கிறிஸ்தவம் | |

## தரம் 9இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 96. | ச. சங்கீதராஜ் | சித்திரம் | ஆங்கிலம்<br>தமிழ்<br>கணிதம்<br>குடியுரிமை<br>PTS | சைவசமயம்<br>வரலாறு<br>சுகாதாரம்<br>புவியியல் |
| 97. | சு. சங்கீர்த்தன் | விஞ்ஞானம் | சைவசமயம்<br>புவியியல் | |
| 98. | ஜெ.ஜெகதீஸ் | புவியியல் | வரலாறு | சித்திரம் |
| 99. | செ. வினுசன் | ஆங்கிலம்<br>வரலாறு<br>சுகாதாரம்<br>கணிதம்<br>குடியுரிமை | | சிங்களம் |
| 100. | கி. கிரிதர்சன் | | சித்திரம் | |
| 101. | பா. அபியூத் | | கிறிஸ்தவம் | |
| 102. | சி. றஜீவன் | | | விஞ்ஞானம் |
| 103. | த. மதுஜா | சைவசமயம்<br>சுகாதாரம் | சங்கீதம் | குடியுரிமை |
| 104. | சி. சிவசுகன்யா | | | கிறிஸ்தவம |
| 105. | ஜெ. சானுஜா | தமிழ்<br>சிங்களம் | | ஆங்கிலம்<br>சங்கீதம் |
| 106. | கி. பிரியங்கா | விஞ்ஞானம் | தமிழ்<br>நடனம் | கணிதம்<br>PTS |
| 107. | ஞா. சந்தியா | | | சங்கீதம் |
| 108. | ம. மதுசா | | | நடனம் |
| 109. | ச. திவ்யா | நடனம் | | |
| 110. | வ.றொசினா | | சிங்களம் | |
| 111. | மே. சிப்பொறா | சங்கீதம்<br>கிறிஸ்தவம் | | |

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 112. | அ.அஜினா | தமிழ்<br>ஆங்கிலம், கணிதம்<br>வரலாறு<br>சைவசமயம்<br>வணிகம், ICT<br>தமிழ் இலக்கியம் | விஞ்ஞானம் | |
| 113. | ஜெ.ஜெயக்குமார் | விஞ்ஞானம் | தமிழ்<br>கணிதம்<br>வணிகம்<br>ICT<br>தமிழ்<br>இலக்கியம் | வரலாறு<br>சைவசமயம் |
| 114. | த.கீர்த்தனா | புவியியல் | | தமிழ்<br>ஆங்கிலம்<br>சைவசமயம்<br>நடனம்<br>ICT |
| 115. | சி.கஜந்தா | | ஆங்கிலம்<br>சங்கீதம்<br>சுகாதாரம் | |
| 116. | வ.சகானா | நடனம் | வரலாறு<br>சைவசமயம் | விஞ்ஞானம்<br>வணிகம் |
| 117. | ஜெ.கீதாஞ்சலி | | | கணிதம் |
| 118. | தி.யுனிஸ்ரா | கிறிஸ்தவம்<br>சங்கீதம் | புவியியல் | |
| 119. | யோ.யதுசா | குடியுரிமை | | |
| 120. | பா.பிரியதாஸ் | | | புவியியல்<br>தமிழ்<br>இலக்கியம் |
| 121 | வ.சாந்தினி | சித்திரம் | கிறிஸ்தவம்<br>குடியுரிமை | மனைப்<br>பொருளியல் |
| 122. | ஜெ.விக்ரரின் | | | சித்திரம் |
| 123. | இ.சஞ்சீபன் | விவசாயம் | | |
| 124. | வி.டெல்சன் | | | விவசாயம் |
| 125. | ர.பௌசலியா | | மனைப்<br>பொருளியல் | |
| 126. | அ.ஜெசிபா | மனைப்<br>பொருளியல் | | கிறிஸ்தவம்<br>குடியுரிமை |
| 127. | ஜே.ஆன்சலன் | | சித்திரம்<br>விவசாயம் | |

| | |
|---|---|
| 128. சு.சுபாசன் | 8A,B |
| 129. கு.துயர்சன் | 3A,3B,C,S |
| 130. வ.பத்மஜன் | 2A,B,4C,2S |
| 131. ச.ஜொனாத்தன்ராஜ் | 2B,3C,3S |
| 132. ஞா.ஏனோஸ் | A,4B,3C |
| 133. ப.நதீஸ் | 2A,2B,5C |
| 134. பு.நிருசன் | 3A,2B,3C |
| 135. ச.சஞ்சீபன் | 6C,2S |
| 136. இ.மிதுசன் | 2B,4C,2S |
| 137. தி.திசா | 3B,3C,2S |
| 138. த.நீரஜா | 2A,3C,4S |
| 139. அ.பகீரத்தனா | 4A,2B,2C,s |
| 140. கி.சர்மியா | A,B,4C,3S |
| 141. செ.கஜானி | A,B,4C,3S |
| 142. நா.றதாஜினி | B,3C,3S |
| 143. செ.டினிஷா | 2A,B,4C,2S |
| 144. கு.கஜேந்தினி | A,B,2C,5S |
| 145. யோ.சபீனா | 4B,2C,3S |
| 146. லோ.கஜீத்தா | B,3C,2S |
| 147. ர.பிரியா | A,2B,3C,3S |
| 148. இ.கயல்விழி | A,B,4C,S |
| 149. ம.இஷாலினி | 3A,B,C,4S |

## க.பொ.த (சா/த) - 2014

| | | |
|---|---|---|
| 150. | விஜயகுமார் விதுஷன் | B,2C,5S |
| 151. | வசந்தராசா மதுசன் | 4A,B,2C,2S |
| 152. | ஹம்சா சிவகுமார் | A,B,3C,2S |
| 153. | தீபிகா செல்வேந்திரன் | A,B,3C,3S |
| 154. | லவலுக்ஷனா விக்னேஸ்வரமூர்த்தி | 2A,2B,2C,2S |
| 155. | நித்தியா பதி | A,3B,4C |
| 156. | பிரியங்கா | 3A, 5C |
| 157. | காயத்திரி இராசு | A, 4C,2S |
| 158. | ஜெயப்பிரிதா ஜேசுதாசன் | 2B,3C,S |
| 159. | யூலிகா அடைக்கலநாதன் | 2B,3C,2S |
| 160. | யனுஷா இராசதுரை | 5A,2B,C,S |
| 161. | ஐதுர்ஷனா ஜெனார்த்தன் | 6A,B,2C |
| 162. | சயனி மன்மதராசா | A,B,C,5S |
| 163. | கீர்த்தனா ஸ்ரீஸ்கந்தராசா | 5A,B,C,2S |
| 164. | அனுஜா பாக்கியசீலன் | 3A,2B,4C |

## தரம் 12 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 165. | சு.அபிராமி | ஆங்கிலம்<br>சங்கீதம் | புவியியல் | |
| 166. | சு.சுவிஸ்னா | கிறிஸ்தவம்<br>அரசியல் | | ஆங்கிலம்<br>தமிழ் |
| 167. | கோ.தாரங்கினி | இந்து நாகரிகம்<br>தமிழ்<br>வரலாறு | | ஆங்கிலம் |
| 168. | றே.அனோஜினி | | கிறிஸ்தவம்<br>வரலாறு | |
| 169. | நா.இவன்சலின் | | | கிறிஸ்தவம்<br>அரசியல் |
| 170. | த.லக்சனா | புவியியல் | இந்து<br>நாகரிகம் | |
| 171. | ஸ்ரீ.தனுசா | | தமிழ்<br>அரசியல் | இந்து<br>நாகரிகம் |
| 172. | வி.சங்கீதா | | | புவியியல் |
| 173. | கு.நிவேஜா | வணிகக்கல்வி<br>கணக்கீடு<br>பொருளியல் | ஆங்கிலம் | |
| 174. | பா.திலக்சன் | | வணிகக்கல்வி | கணக்கீடு<br>பொருளியல் |
| 175. | பா.பிரதாப் | | | வணிகக்கல்வி |
| 176. | ஜெ.ஜெனோஜன் | | கணக்கீடு<br>பொருளியல் | |

## தரம் 13 இல் பரிசு பெறும் மாணவர்களின் விபரம்

| இல | மாணவர் பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|---|
| 177. | ப.பத்மலோஜன் | தமிழ்<br>கிறிஸ்தவம்<br>ஆங்கிலம்<br>GIT<br>புவியியல் | | |
| 178. | யே.அம்மினதாப் | வரலாறு | தமிழ்<br>கிறிஸ்தவம்<br>ஆங்கிலம்<br>GIT | |
| 179. | இ.பிரியந்தினி | | புவியியல் | தமிழ்<br>இந்து நாகரிகம் |
| 180. | ச.சாரங்கன் | | அரசியல் | ஆங்கிலம்<br>GIT |
| 181. | ம.துவாரகன் | அரசியல் | | |
| 182. | செ.கஸ்தூரி | | நடனம் | அரசியல் |
| 183. | வி.சோபிகா | | புவியியல்<br>இந்து நாகரிகம் | |
| 184. | இ.தேனுசா | நடனம் | | |
| 185. | இ.வனோஜா | இந்து நாகரிகம் | | |

## க.பொ.த (உ/த) - 2015

| இல | மாணவர் பெயர் | A சித்தி பெற்ற பாடங்கள் |
|---|---|---|
| 186. | ப.பத்மலோஜன் | கிறிஸ்தவ நாகரிகம் |

| இல | பெயர் | விடயம் | வலயம்/ மாகாணம்/ தேசியம் | இடம் |
|---|---|---|---|---|
| 187. | ஞா. ஏனோஸ் | முப்பாய்ச்சல் | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 188. | வி. விதுசன் | ஓட்டம் 1500 m | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 189. | த. லக்ஷனா | உயரம் பாய்தல் | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 190. | யோ.சபீனா | Copy writing | வலயமட்டம் மாகாண மட்டம் | 1ஆம் இடம் 3 ஆம் இடம் |
| 191. | சு.அபிராமி | Copy writing | வலயமட்டம் மாகாண மட்டம் | 1ஆம் இடம் 3 ஆம் இடம் |
| 192. | வி.சுவேதா | சிங்களம் - வாசிப்பு | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 193. | நொ.பவானி | சிங்களம் - வாசிப்பு | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 194. | ஜெ.ஒல்வியாடிலக்சினி | சிங்களம் - மொழி கிரகித்தல் | வலயமட்டம் மாகாணமட்டம் | 1ஆம் இடம் |
| 195. | யோ.யோசிகா | சிங்களம் - மொழி கிரகித்தல் | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 196. | நா.அபிகா | சிங்களம் - மொழி கிரகித்தல் | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 197. | ந.சஞ்ஜய் | சிங்களம் - மொழி கிரகித்தல் | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 198. | யோ.சமிதா | சிங்களம் - பேச்சு | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 199. | இ.சௌமியா | சிங்களம் - பேச்சு | வலயமட்டம் | 1ஆம் இடம் |

## முதலாம் இடம்

1. ப. நதீஸ்
2. பு. நிருஷன்
3. சு. சதீசன்
4. பி. ஜெயராட்ஜெஸ்மன்
5. சு. சுணராஜ்
6. சி.அனிஸ்ரன்
7. ச.ஜொனாத்தன்ராஜ்
8. தி.திவாகரன்
9. ஜெ.ஜெயக்குமார்
10. பா.பிரியதாஸ்
11. ப.கபில்ராஜ்
12. சி.சஜந்தன்
13. க.டினோஜன்
14. கு.துயர்சன்
15. இ.சஞ்சீவன்

## இணைபாட விதானச் செயற்பாடுகள் - 2015

| இல | பெயர் | [illegible] | தரம் | வலயம்/ மாகாணம்/ தேசியம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 01. | றெ. றெமீன் | உயரம் பாய்தல் | 8 | வலயமட்டம் | 3 ஆம் இடம் |
| 02. | ப. நதீஸ் | ஓட்டம் 200 m<br>முப்பாய்ச்சல்<br>ஓட்டம் 100 m | 12 | வலயமட்டம்<br>வலயமட்டம்<br>வலயமட்டம் | 3 ஆம் இடம்<br>2 ஆம் இடம்<br>3 ஆம் இடம் |
| 03. | சு. சதீசன் | நீளம்பாய்தல் | 12 | வலயமட்டம் | 2 ஆம் இடம் |
| 04. | ஞா. ஏனோஸ் | முப்பாய்ச்சல் | 12 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 05. | வி. விதுசன் | ஓட்டம் 800 m<br>ஓட்டம் 1500 m | 13 | வலயமட்டம்<br>வலயமட்டம் | 2ஆம் இடம்<br>1ஆம் இடம் |
| 06. | வ. சகானா | ஈட்டி | 11 | வலயமட்டம் | 3 ஆம் இடம் |
| 07. | வி. விக்ரறின் | ஓட்டம் 1500 m | 11 | வலயமட்டம் | 3 ஆம் இடம் |
| 08. | த. லக்ஷனா | உயரம் பாய்தல் | 13 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 09. | அ. அபிநயா | ஓட்டம் 5000 m<br>ஓட்டம் 1500 m<br>ஓட்டம் 800 m | 13 | வலயமட்டம்<br>வலயமட்டம்<br>வலயமட்டம் | 2 ஆம் இடம்<br>2 ஆம் இடம்<br>3 ஆம் இடம் |
| 10. | ச. பிருந்தா | ஓட்டம் 5000 m | 13 | வலயமட்டம் | 3 ஆம் இடம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | ர.பிரியா | வணிக பேச்சு | 11 | வலயமட்டம் | 3 ஆம் இடம் |
| 12. | யோ.சபீனா | Copy writing | 11 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 12. | சு.அபிராமி | Copy writing | 13 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 13. | சு.சுபாஸ்ரன் | இலக்கணப்போட்டி | 11 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 14. | வி.சுவேதா | சிங்களம் - வாசிப்பு | 8 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 15. | சி.பவானி | சிங்களம் - வாசிப்பு | 7 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 16. | றொ நிருஜனா | சிங்களம் - வாசிப்பு | 9 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 17. | வி.விதுஷா | சிங்களம் - வாசிப்பு | 9 | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| 18. | அ.கோபினா | சிங்களம் - வாசிப்பு | 7 | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| | கி.நிலைக்சனா | சிங்களம் - பேச்சு | | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 19. | ஜ.அபிநயா | சிங்களம் - பேச்சு | 7 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 20. | யோ.சமிதா | சிங்களம் - பேச்சு | 9 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 21. | இ.சௌமியா | சிங்களம் - பேச்சு | 7 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 22. | ஜெ.ஒல்வியாடில க்சினி | சிங்களம் - மொழி கிரகித்தல் | 8 | வலயமட்டம் மாகாணமட்ட ம் | 1ஆம் இடம் |
| 23. | யோ.யோசிகா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 10 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 24. | நா.அபிகா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 9 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 25. | ந.சஞ்ஜய் | சிங்களம் - மொழி கிரகித்தல் | 7 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 26. | து.மதுஜா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 10 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 27. | கு.விதுர்சிகா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 8 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 28. | ச.சோபினி | சிங்களம் - மொழி கிரகித்தல் | 7 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 29. | | சிங்களம் குழுப்பாட்டு | | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 30. | தரம் 3 | செயற்பட்டு மகிழ்வோம் | | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| 31. | தரம் 4 | செயற்பட்டு மகிழ்வோம் | | வலயமட்டம் | 4ஆம் இடம் |
| 32. | தரம் 5 | செயற்பட்டு மகிழ்வோம் | | வலயமட்டம் | 7ஆம் இடம் |

## இணைபாட விதானச் செயற்பாடுகள் - 2016

| இல | பெயர் | விடயம் | தரம் | வலயம்/ மாகாணம்/ தேசியம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 01. | அ.திரிஷா | ஓட்டம் 100 m<br>ஓட்டம் 200 m | 7 | வலயமட்டம்<br>வலயமட்டம் | 3ஆம் இடம்<br>2ஆம் இடம் |
| 02. | இ.சங்கீதன் | ஓட்டம் 100 m<br>ஓட்டம் 200 m | 7 | வலயமட்டம்<br>வலயமட்டம் | 3ஆம் இடம்<br>2ஆம் இடம் |
| 03. | ஜெ.ஜெயசீலி | ஓட்டம் 100 m | 9 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 04. | ஜே.ஜெயசாளினி | நீளம் பாய்தல் | 9 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 05. | யோ.சமிதா | ஓட்டம் 400 m | 9 | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| 06. | க.கஜீபன் | நீளம் பாய்தல் | 9 | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| 07. | வி.விதுசன் | ஓட்டம் 800 m<br>ஓட்டம் 1500 m<br>ஓட்டம் 5000 m | 12 | வலயமட்டம்<br>வலயமட்டம்<br>வலயமட்டம் | 2ஆம் இடம்<br>1ஆம் இடம்<br>1ஆம் இடம் |
| 08. | த.லக்சனா | உயரம் பாய்தல் | 13 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 09. | ர.ரஜிந்தினி | Copy writing | 5 | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| 10. | 17 வயது ஆண் | உதைபந்து | | வலயமட்டம | 1ஆம் இடம் |
| 11. | 19 வயது ஆண் | உதைபந்து | | வலயமட்டம | 2ஆம் இடம் |
| 12. | 19 வயது பெண் | உதைபந்து | | வலயமட்டம | 2ஆம் இடம் |
| 13. | சி.பவானி | சிங்களம் - வாசிப்பு | 7 | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| 14. | கு.விதுர்சிகா | சிங்களம் - வாசிப்பு | 8 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 15. | றொ நிருஜனா | சிங்களம் - வாசிப்பு | 9 | வலயமட்டம் | 1ஆம் இடம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | வி. தர்சிகா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 9 | வலயமட்டம் | 3ஆம் இடம் |
| 17. | செ. மதுசா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 9 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 18. | ஜெ.ஒல்வியாடிலக்சினி | சிங்களம் - மொழி கிரகித்தல் | 8 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 19. | வி.சுவேதா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 8 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 20. | நா. அபிகா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 9 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 21. | யோ. சமிதா | சிங்களம் - மொழி கிரகித்தல் | 9 | வலயமட்டம் | 2ஆம் இடம் |
| 22. | ந. டக்சனா | சிங்களப்பேச்சு | 9 | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 23. | | குழுப்பாட்டு சிங்களம் | | வலயமட்டம் | 1ஆம் இடம் |
| 24. | | தென்மோடி கூத்துப்போட்டி | | வலயமட்டம் மாகாண மட்டம் | 1ஆம் இடம் 2 ஆம் இடம் |
| 25. | ஜ. அபிநயா | தனிஇசை | 7 | வலயமட்டம் | 3 ஆம் இடம் |
| 26. | அ. பகீரத்தனா | வணிக கட்டுரைப்போட்டி | 12 | வலயமட்டம் | 3 ஆம் இடம் |

## உதைபந்தாட்ட அணி 19 வயது ஆண் வலய மட்டம்

## முதலாம் இடம்

1. இ.மதுஜன்
2. வ.மதுசன்
3. லோ.மதுசன்
4. க.டினோஜன்
5. க.கஜீபன்
6. மே.ஜோன்
7. வி.விதுசன்
8. கு.டானியல்
9. ஞா.சசிந்தன்
10. இ.சுகிந்தன்
11. பா.டிலக்சன்
12. த.திலக்சன்
13. கு.சுஜீவன்
14. க.கஜீபன்
15. இ.தஜிந்தன்

## உதைபந்தாட்ட அணி 19 வயது பெண் வலய மட்டம்

### முதலாம் இடம்

1. இ.பிரிந்தா
2. வ.சகானா
3. அ.அஜினா
4. ஜெ.கீதாஞ்சலி
5. மௌ.ஜெனா
6. த.பியூலா
7. அ.அனோஜா
8. உ.உசாநந்தினி
9. அ. ஜெசிபா
10. பா. நிவேதினி
11. த. சொஜினா
12. செ. விஜிதா
13. க. சுலக்சனா
14. யோ. யதுசா
15. றெ. றெபேக்கா

## தனி இசை பிரிவு I தமிழ் தமிழ் தினப்போட்டி - 2015

### மூன்றாம் இடம்

1. வி.நிருத்திகா
2. இ.டினோஜா
3. ஐ.அபிநயா
4. ம.திருமகள்
5. அ.கெச்சியாள்
6. த.செந்துஷா
7. ஐ. சானுஜா
8. சு.ஜனனி
9. யே. ஜெயசாளினி
10. மே. சிப்போறா

## தனி இசை பிரிவு II தமிழ் தமிழ் தினப்போட்டி - 2016

1. ஐ.அபிநயா - மூன்றாம் இடம்

## தென்மோடி பாஞ்சாலி சபதம் - 2016

வலயம் - 1ம் இடம்

மாகாணம் - 2ம் இடம்

# பாடசாலைக் கீதம்

உயிரினும் இனியநம் உயர் வாழ்வினையே
உணர்வொடு போற்றுவோம் வாரீர்!

ஓங்குக கல்வி செல்வ மோடீகை
ஒளி திகழ் தெய்வீக வாழ்க்கை
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை
உயிரினும்...

ஒரு குலமென உயிர் வாழ்வோம்
உளமதில் நடுநிலை சேர்வோம்
உயர்தர நமதுயர் மகா வித்தியாலயம்
உருவளர் நாவற்குழிதனையே நினைவோம்
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை
உயிரினும்...

தீபம் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்,
T.P : 0772506234